## தேர்ச்சி வீதம் 3.19 குறைந்தது

# சி.பி.எஸ்.இ. 12ம் வகுப்பு தேர்வு முடிவில் அதிர்ச்சி!

சென்னை, மே 15 -

மத்திய இடைநிலை கல்வி வாரிய (சி.பி.எஸ்.இ.) பாடத் திட்டத்தில், நாடு முழுவதும் நடத்தப்படும் 19 ஆயிரத்து 967 பள்ளிகளில் பயின்ற 12ம் வகுப்பு மாணவர்களுக்கான பொதுத் தேர்வு, கடந்த பிப்ர வரி 17ம் தேதி முதல் ஏப்ரல் 10ம் தேதி வரை நடைபெற் றது. இந்த தேர்வு முடிவுகள் நேற்று முன்தினம் வெளியிடப் பட்டன.

17 லட்சத்து 68 ஆயிரத்து 968 மாணவ, மாணவியர் தேர் வில் பங்கேற்ற நிலையில், 15 லட்சத்து 7 ஆயிரத்து 109 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். மொத்த தேர்ச்சி வீதம் 85.20 சதவீதம். இது கடந்த 2025ம் தேர்வைவிட 3.19 சதவீதம் குறைவு.

2026ம் ஆண்டு நடந்த 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் மொத்தம் உள்ள 22 மண்டலங் களில், திருவனந்தபுரம் மண்ட லம் வழக்கம் போல் 95.62 சதவீதம் பெற்று முதலிடம் பிடித்தது.

சென்னை மண்டலம் 93.84 சதவீதம் பெற்று 2ம் இடம் பிடித்துள்ளது.

பெங்களூரு மண்டலம் 93.19 சதவீதம் பெற்று 3 இடம் பிடித்துள்ளது.

தேர்வில் மாணவியர் 88.86 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ள னர், மாணவர்கள் 82.13 சதவீ தம் தேர்ச்சி பெற்றுள்ளனர். மாணவியர் கூடுதலாக 6.73 சதவீதம் தேர்ச்சி பெற்று சாதித் துள்ளனர்.

சிறப்பு தேவையுள்ள மாணவ, மாணவியர் 6342 பேர் தேர்வு எழுதிய நிலையில், 5718 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். மொத்த தேர்ச்சி வீதம் 90.16 சதவீதம். இந்த தேர்வில் 90 சத வீதம் மற்றும் அதற்கு மேலும் பெற்று தேர்ச்சி பெற்றவர்கள் 94028 பேர். மொத்த தேர்ச்சி வீதம் 5.32 சதவீதம்.

அதேபோல 95 சதவீதம் மற்றும் அதற்கு மேலும் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றவர்கள் 17 ஆயிரத்து 113 பேர்.

இந்த ஆண்டின் 12ம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவ மாண வியரில் தேர்ச்சி பெற்றவர்கள் தவிர, மீண்டும் தேர்வு எழுத வேண்டியவர்கள் என 1 லட் சத்து 63 ஆயிரத்து 800 பேர் பட்டியலிடப்பட்டுள்ளனர்.

இது தவிர, கேந்திரிய வித் யாலயா பள்ளிகள் 98.55 சதவீ தம், ஜௌன்வி பள்ளிகள் 98.47 சதவீதம், அரசுப் பள்ளிகள் 89.55 சதவீதம், அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் 86.07 சதவீதம், ஏகல்வியா மாதிரி உறைவிடப் பள்ளிகள் 85.55 சதவீதம், தனியார் பள்ளிகள் 84.22 சதவீதம் தேர்ச்சியை பெற்றுள்ளன.

சென்னை மண்டலம்: சென்னை மண்டலத்தில் மொத்தம் 1 லட்சத்து 3 ஆயி ரத்து 391 பேர் தேர்வு எழுதி னர். இதில், 95 ஆயிரத்து 979 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். மொத்த தேர்ச்சி வீதம் 93.84 சதவீதம்.

இந்நிலையில், சென்னை மண்டலத்தில் 4394 பேர் மீண் டும் தேர்வு எழுத வேண்டும். மாநில அளவில் தமிழ்நாட்டில் 88 ஆயிரத்து 146 பேர் தேர்வு எழுதினர். அவர்களில் 83 ஆயிரத்து 962 பேர் தேர்வில் வெற்றி பெற்றுள்ளனர். மொத்த தேர்ச்சி வீதம் 95.25.

விருப்ப பாடமாக இந்தி மொழி எடுத்து படித்தவர்களில் 5 பேர் 100க்கு 100 பெற்றுள்ள னர். வரலாறு 409, அரசியல் அறிவியல் 725, புவியியல் 284, பொருளாதாரம் 435, உளவி யல் 2533, கணக்கு 1283, இயற் பியல் 96, வேதியியல் 1061, உயிரியல் 1343, கணக்குப் பதி வியல் 1437, கணினி அறிவியல் 994, தமிழ் 52, அடிப்படைக் கணிதம் 172, ஆங்கிலம் 2401, சமஸ்கிருதம் 119 பேர் 100க்கு 100 மதிப்பெண் பெற்று சாதித் துள்ளனர்.

## சென்னையில் இருந்து

# அபுதாபிக்கு புறப்பட்ட விமானத்தில் கோளாறு!

சென்னை, மே 15 –

சென்னையில் இருந்து அபுதா பிக்கு செல்லும் எத்தியாட் ஏர்வேஸ் விமானம் புறப்படத் தயாரான போது விமானத்தில் 228 பயணிகள், 10 விமான ஊழியர்கள் இருந்தனர்.

விமானம் ஓடுபாதையில் ஓடத் தொடங்கியபோது, விமானத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட் டதை விமானி கண்டுபிடித்து ஓடு பாதையில் நிறுத்தி கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்தார்.

விமானப் பொறியாளர்கள் குழுவினர், தீயணைப்புப் படை யினர் விரைந்து வந்து விமா னத்தை ஆய்வு செய்த போது விமானத்தில் ஹைட்ராலிக் கோளாறு ஏற்பட்டிருப்பது தெரிய வந்தது.

இதையடுத்து, விமானம் தாமத மாகப் புறப்படும் என்று அறிவிக் கப்பட்டது.


# கேள்விக் கென்ன பதில்?

**கேள்வி:** எதிர்க் கட்சிகளின் தலைவர்களை யெல்லாம் நேரில் சென்று சந்தித்த முதல்வர் விஜய், அ.தி.மு.க. பொதுச் செயலாளர், முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமியைச் சந்திப்பதைத் தவிர்த்திருக்கிறாரே ?

**பதில்:** திட்டமிட்டு, வேண்டுமென்றே தவிர்த்திருப்ப தாகத்தான் புரிந்து கொள்ள முடிகிறது.

எடப்பாடி பழனிசாமியைச் சந்தித்திருந்தால், அ.தி.மு.க.வின் மற்றொரு பிரிவினரான வேலுமணி, சண்முகம் உள்ளிட்டோரின் கோபத்திற்கும், எதிர்ப்புக்கும் ஆளாக வேண்டியிருக்குமே, அதனால் ஆதரவில் பாதிப்பு ஏற்பட்டுவிடக் கூடுமே என்று விஜய் நினைத்திருக்கக் கூடும்.

# பிகிலும் திகிலும்



**வே**லுமணி. விஜயபாஸ்கர்
உள்ளிட்ட ஊழலில் ஊறிய
உத்தமர்களை எல்லாம்
ஏற்கெனவே தத்தெடுத்து
வைத்திருக்கும் பா.ஜ.க.
தாங்கள் திட்டமிட்டபடி
அ.தி.மு.க.வை முடித்த
கையோடு இப்போது
அந்த அ.தி.மு.க.வில் தப்பிப் பிழைத்த 25 எம்.எல்.ஏ.க்களை
த.வெ.க. பக்கமாக நகர்த்தவும் ஏற்கெனவே
த.வெ.க.வோடு ஒட்டிக் கொண்டுள்ள காங்கிரஸ் விசிக
இடதுசாரிகளை அங்கிருந்து துரத்தவும்

பிறகு வேலுமணி, விஜயபாஸ்கர்
சி.வி.சண்முகம் உள்ளிட்டோரை த.வெ.க.வின்
அமைச்சரவையில் பங்கேற்க வைத்து
த.வெ.க.வை பாதி அ.தி.மு.க.வாக மாற்றி
அதன் மூலம்
முற்றிலுமாக தங்கள் கட்டுப்பாட்டுக்குள் விஜய்யை கொண்டு
வரவும் துரிதமான ஏற்பாடுகளை அது செய்து வருகிறது.

குறிப்பாக
காங்கிரஸை தமிழ்நாட்டில் நடுத்தெருவில் நிறுத்துவது என்பதை
மிகக் குறியாக கொண்டு அது
காய்நகர்த்தி வருகிறது.

ஏற்கெனவே தங்களால் த.வெ.க.வுக்குள்
புகுத்தப்பட்டுள்ள செங்கோட்டையன்,
பா.ஜ.க.வின் முன்னாள் ஐ.டி. விங் செயலாளர் நிர்மல்குமார்
முன்னாள் IRS அதிகாரி அருண்ராஜ் மற்றும் "லாட்டரி மார்ட்டின்"
குடும்பத்தார்.. இவர்களோடு

கோவை
ஆர்.ஸ்.எஸ் மாநாட்டில் சகோதரர் சகிதமாக பங்கேற்ற வேலுமணி..
குமரியில் அதே ஆர்.எஸ்.எஸ். பேரணியை தொடங்கி வைத்து
எடப்பாடியின் நடவடிக்கைக்கு ஆளானவர்களோடு

குட்கா வழக்கில் சி.பி.ஐ.யிடம் சிக்கியுள்ள விஜயபாஸ்கர் என
அ.தி.மு.க.விலிருந்து இப்போது நகர்த்தப்படும் இந்த
தத்துப் பிள்ளைகளும் இணைந்து ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வின்
பாதாளத் திட்டங்களை கச்சிதமாக நிறைவேற்ற அனைத்து
கால அட்டவணைகளும் தயாராகி விட்டது.

ஆம் ஆள முடியாத மண்ணின்
ஆள்வோரை அடிமையாக்குவது
பிறகு அந்த அடிமைகளை கொஞ்சம் கொஞ்சமாக தங்களது
உடமையாக்குவது என்னும்

காவிகளின் சூழ்ச்சியால் கபளீகரமான
மராட்டிய தாக்கரேக்கள்
பீகாரின் நிதீஷ்குமாரர்கள்
என்னும் வரிசையில்
அடுத்து
நம்ம "பிகிலு" தான் ..

**என்னநாஞ்**
**சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித்
தொடர்புக் குழு துணைத்
தலைவர்

# ‘ரீல்ஸ்’ ஆட்சியாக இல்லாமல் ‘ரியல்’ ஆட்சியாக நடத்துங்கள்!

## பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

அடுத்து, அதே பா.ஜ.க. தலைமை யிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இருக்கக்கூடிய பெரிய கட்சியான அ.தி.மு.க. கிட்டத்தட்ட இரண்டாகப் பிளவு பட்டிருக்கிறது. பிளவுபட்ட ஒரு அணி உங்களுக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். அடுத்து நடந்த இன்சிடென்ட்தான் ஒரு மிகப்பெரிய ட்விஸ்ட். பிளவுபட்ட குரூப் பில் இருக்கக்கூடிய ஒரு தலைவரின் வீட்டிற்கு ஒரு புது சோபா செல்கிறது. சோபா பின்னாடியே புது முதலமைச்சரும் செல்கிறார். புதுமை யாக ஆட்சி நடத்துவீர்கள் என்று பார்த் தால், `புஷ்பா’ படம் போல் ஆட்சி நடத் துகிறீர்கள். தேர்தல் நேரத்தில் ஊழல் சக்தி என்று சொன்னீர்கள். ஆனால், இன்றைக்கு சோஷியல் மீடியாவில் மக் கள் உங்களைப் பார்த்துக் கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டார்கள்.

என்ன கேட்கிறார்கள் தெரியுமா? அந்த ஊழல் சக்தியோடு சேர்ந்து இருக் கின்ற ஆளுங்கட்சியை, இப்போது என்ன சக்தி என்று கூறப்போகிறீர்கள்? `க்ளீன் கவர்மெண்ட்’ என்று சொன்னீர் கள் இதுதான் உங்கள் ‘கிளீன் கவர் மென்ட்டின் லட்சணமா’ என்று மக்கள் கேட்க ஆரம்பித்து விட்டார்கள்.

இப்படி நீங்கள் கூவத்தூரையும் மிஞ்சுகின்ற அளவிற்கு, அடிக்கின்ற கூத்தைப் பார்க்கும்போது, இந்த அரசு எத்தனை நாளைக்கு நீடிக்கப் போகி றது என்று மக்களுக்கு சந்தேகம் வர ஆரம்பித்துவிட்டது. `முதல் கோணல் முற்றிலும் கோணல் என்பது மாதிரி, உங்கள் நடவடிக்கைகள் எல்லாமே இன்றைக்கு எல்லை மீறி நடந்து கொண்டிருக்கின்றன.

### தவறான கருத்துகளுடன் மக்களை திசை திருப்பும் முயற்சி!

இப்படி எம் எல் ஏக்களையெல்லாம் கடன் பெற்று ஆட்சி நடத்துகின்ற முதல மைச்சர், தான் அளித்துள்ள போலி வாக்குறுதிகளை நிறைவேற்ற முடி யாது என்று தெரிந்தவுடன், முந்தைய அரசு அதாவது எங்களுடைய அரசு வளர்ச்சிக்காக பெற்ற கடன் குறித்து, தவறான கருத்துக்களைத் தந்து, மக் களை இன்றைக்கு திசை திருப்ப முயற்சி செய்து கொண்டிருக்கிறார்.

பெரும்பான்மையும் இல்லாத, அரசியலில் அடிப்படை நேர்மையும் அல்லாத இந்த அரசு நல்லாட்சி தரும், தமிழ்நாட்டு மக்களின் உரிமைக்காகப் போராடும் என்று மக்களுக்கு துளியும் நம்பிக்கை இல்லை.

முக்கியமான ஒரு விஷயத்தை இங்கு பதிய வைக்க நான் விரும்புகிறேன்.

உங்களுக்கு ஓட்டுப் போட்ட மக் களே, நடப்பதை எல்லாம் பார்த்துவிட்டு ஒரு பெரிய தவறை செய்து விட்டோமே என்று இன்று வருத்தப்பட ஆரம்பித்து விட்டார்கள். மக்களின் அந்த உணர்வை வெளிப்படுத்தும் விதமாக இந்த ஓட்டெடுப்பில் கலந்து கொள்ளா மல், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நாங்கள் வெளிநடப்பு செய்யப் போகிறோம்.

நாங்கள் வெளிநடப்பு செய்தாலும், அதனால் பேரவையின் எண்ணிக்கை அளவு குறைந்து, நீங்கள் நிச்சயம் இந்த வாக்கெடுப்பில் வெற்றி பெறத் தான் போகிறீர்கள். அப்படி வெற்றி பெற்ற பிறகாவது மக்களின் நம்பிக்கை யைக் காப்பாற்றுகின்ற வகையில், உங்களின் பணிகள் இருக்க வேண்டும்.

எங்களின் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், கடந்த ஐந்து வருடமாக, ஒவ்வொரு குடும்பத்துக்கும் பார்த்து பார்த்து திட்டங் களை நிறைவேற்றிக் கொடுத்தார். அந்தத் திட்டங்களை எல்லாம் நீங்கள் தொடர வேண்டும். தயவுசெய்து அதில் அரசியல் செய்ய வேண்டாம்.

### மகளிர் உரிமைத் தொகைக்காக காத்திருக்கும் மக்கள்!

ஏனென்றால், இந்த மாதம் 15ஆம் தேதி கலைஞர் மகளிர் உரிமைத் தொகைக்காக, ஒரு கோடியே 31 லட்சம் மகளிர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆயிரம் ரூபாய் வருமா என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதே மாதிரி புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டங்களில் கல்லூரிக்குச் செல்கின்ற மாணவர்களுக்கு மாதந் தோறும் வருகின்ற கல்வி ஊக்கத் தொகை, ஏழாம் தேதி கொடுத்திருக்க வேண்டும். இதுவரை வரவில்லை. அவர்களும் காத்துக் கொண்டிருக்கி றார்கள்.

இப்போது பள்ளிகள் இல்லை என்றாலும், ஜூன் மாதம் பள்ளிகளைத் திறக்கப் போகிறார்கள். அப்போது காலை உணவுத் திட்டத்திற்காக பள்ளி மாணவர்கள் எல்லாம் காத்துக் கொண் டிருக்கிறார்கள். இப்படி பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. `நான் முதல் வன் திட்டம்’, `தாயுமானவர்’, `அன்புக் கரங்கள்’ என்று பல்வேறு திட்டங்களின் பயனாளிகள் எல்லாம் ஆவலோடு இந்த அரசு என்ன செய்யப் போகிறது என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதனால் நான் உங்களிடம் கேட் டுக் கொள்வது, முதலமைச்சர் அவர் கள் பதவியேற்ற போது, தன் முதல் உரையில் அவகாசம் வேண்டும் என்று கேட்டீர்கள், நிச்சயம் அவகாசம் எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால், காத் துக் கொண்டிருக்கின்ற அனைவரை யும் நீண்ட காலம் காக்க வைத்து விடாதீர்கள்.

### கவர்ச்சியான வாக்குறுதிகள்!

அது மட்டுமல்ல, தேர்தலுக்கு முன்பு பல கவர்ச்சியான வாக்குறுதி களையும் நீங்கள் கொடுத்திருக்கிறீர் கள். மக்கள் அதையும் ஞாபகம் வைத்திருக்கிறார்கள்.

மகளிருக்கு மாதம் 2,500 ரூபாய், ஆண்டுக்கு 6 சிலிண்டர், தங்கச் செயின், மோதிரம், பட்டுப் புடவை, வேலையில்லா இளைஞர்களுக்கு உதவித்தொகை என்று அந்தப் பட்டிய லும் நீண்டு கொண்டிருக்கிறது. பெரிய லிஸ்டுதான்.

அதில் ஒரு சில வாக்குறுதிகளை யாவது, முதல் கையெழுத்தில் நீங்கள் நிறைவேற்றுவீர்கள் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள். நீங்கள் வாக்குறுதி களைச் சொல்லும் பொழுது நடை முறைக்குச் சாத்தியமானவற்றை மட்டும்தான் சொல்கிறேன் என்று எல்லா கூட்டத்திலும் திரும்பத் திரும்பச் சொல்லி இருக்கிறீர்கள். எனவே, அதை விரைந்து செய்து காட்டுங்கள்.

### பொருளாதார வளர்ச்சியில் முதல் மாநிலமாக்கியவர் தலைவர்!

இந்த நேரத்தில், எங்கள் திராவிட மாடல் ஆட்சியைப் பற்றி ஒன்றே ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்பு கிறேன். நாங்கள் ஆட்சிக்கு வரும் போது 2021 கடுமையான கோவிட் பெருந்தொற்று செகண்ட் வேவ் காலம் நடந்துகொண்டு இருந்தது. அப்போது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி எவ்வளவு தெரியுமா? வெறும் 0.7 சதவிகிதம். அந்த நிலைமையிலும் எங்கள் தலைவர் முதலமைச்சர் அவர்கள் முதல் கையெழுத்திலேயே மகளிர்க்கு விடியல் பயணம் திட்டத் தைக் கொடுத்தார். முதல் நாளே எல்லா குடும்பங்களுக்கும் 4,000 ரூபாய் கொரோனா நிவாரணத் தொகையை லாக்டவுன் காரணமாக முதலமைச்சர் கொடுத்தார்.

ஆவின் பால் விலை குறைப்பு வரை, முதல் நாளே ஐந்து கோப்பு களில் கையெழுத்திட்டார். ஒரே மாதத் தில் தேர்தல் அறிக்கையில் சொன்னது மாதிரி, பெட்ரோல் விலையை லிட்ட ருக்கு மூன்று ரூபாய் குறைப்பதற்கான உத்தரவையும், எங்கள் முதலமைச்சர் போட்டார். இப்படி கடுமையாக உழைத்ததால்தான், ஐந்தாண்டுகள் முடிவில் இன்றைக்கு இந்தியா விலேயே பொருளாதார வளர்ச்சியில், நம்பர்ஒன் மாநிலமாக தமிழ்நாட்டை எங்களுடைய தலைவர் மாற்றிக் காட்டியிருக்கிறார்.

### மக்கள் உணர்வினை வெளிப்படுத்த வெளிநடப்பு!

நாங்கள் நம்பர்ஒன் மாநிலமாக மாற்றி விட்டுத்தான், ஆட்சியை விட்டுச் சென்றிருக்கிறோம். உங்கள் ஆட்சி யைப் பொருத்தவரைக்கும், வெறும் `இன்ஸ்டாகிராம்ல ரீல்ஸ் ஆட்சி’யாக இல்லாமல், ரியல் ஆட்சியாக நடத்துங் கள். அது மட்டும்தான் மக்களின் கோரிக்கை.

எங்களின் தலைவர், திராவிட முன் னேற்றக் கழகத்தின் தலைவர் முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின் அவர் களின் கட்டளையின்படி, நீங்கள் ஆட்சியைத் தொடர, நாங்கள் தடை யாக இருக்க விரும்பவில்லை. அந்த வகையில், பேரவையிலிருந்து நாங் கள் வெளிநடப்பு செய்கிறோம்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரை யாற்றினார்.

## 3 நாளில் 3 பிரச்சினைகள்:

# த.வெ.க.வை வாட்டி எடுக்கும் தி.மு.க. கூட்டணிக் கட்சிகள்!

சென்னை, மே 15 -

3 நாளில் 3 பிரச்சினை களால் த.வெ.க.வை தி.மு.க. கூட்டணி கட்சிகள் வாட்டி எடுத்தன. விஜய், முதல் அமைச்சராக பொறுப்பேற்று 3 நாட்கள் முடிந்து இருக் கிறது. ஆனால் இந்த 3 நாட் களில் அந்த கட்சியின் செயல்பாடுகளுக்கு காங்கி ரஸ், கம்யூனிஸ்டு மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கடும் எதிர்ப்பு குரல் கொடுத்து இருக்கின்றன.

அதில் முதல் பிரச்சினை பதவியேற்பு நாளின்போது தமிழ்த்தாய் 3ம் இடத்தில் பாடப்பட்டு விட்டது. இது தமிழுக்கு ஏற்பட்ட இழுக்கு என்று தி.மு.க., முதல் குரல் கொடுத்தது. அதோடு அந்த பிரச்சினை நிற்காமல் த.வெ.க.வுக்கு ஆதரவு தந்த கம்யூனிஸ்டு மற்றும் வி.சி.க. தரப்பும் கடும் எதிர்ப்பு குரல் கிளப்பினர். ஆனால் அன்று மாலை தற்காலிக சபாநாய கர் பதவியேற்கும் நிகழ்வி லும் தமிழ்த் தாய் வாழ்த்து 3வதாக பாடப்பட்டது. அத னால் கோபத்தின் உச்சிக்கு சென்ற த.வெ.க. ஆதரவு கட்சிகள் மீண்டும் தங்களது எதிர்ப்பை கடுமையாக பதிவு செய்தனர். ஆனால் அதற்கு அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, முறைப்படியான அரசின் தகவலாக அல்லா மல் தனது எக்ஸ் பதிவில் இதுபோன்ற நிலை இனி இல்லாமல் பார்த்து கொள்கி றோம் என்று பொத்தாம் பொதுவாக பதிவு செய்து இருந்தார். இது ஒருபுறம் இருக்க முதலமைச்சராக 2021ல் மு.க.ஸ்டாலின் பதவியேற்பு நிகழ்ச்சியிலும் தேசிய கீதத்திற்கு அடுத்தப் படியாக தமிழ்த்தாய் பாடப் பட்டது என்று சமூக வலை தளத்தில் த.வெ.க.வினர் பதிவு செய்தனர்.

கல்வி அமைச்சர் அடுத்த பிரச்சினையாக விஜய் அமைச்சரவையில் வெங்கட் ரமணனுக்கு பதவி வழங்கி யது. மேலும் அவருக்கு கல் வித்துறை வழங்கப்பட்டு இருப்பதாகவும் தகவல் பர வியது. அதாவது பெரியா ரின் கொள்கைக்கு எதிரான உயர்வகுப்பினரான அவ ருக்கு அமைச்சர் பதவி வழங் கியதோடு மட்டுமல்லாமல் கல்வி பொறுப்பை வழங்கு வதை ஏற்று கொள்ள முடி யாது என்று வி.சி.க.வினர் பலரும் தங்களது எதிர்ப்பு கருத்துகளை சமூக வலை தளத்தில் பதிவிட்டனர். இன்னும் சிலர் ஒருபடி மேலே போய் தேர்தலுக்கு முன்பு வெங்கட்ரமண னுக்கு எதிராக அவரது மனைவி பேசிய புகார் வீடி யோவை சமூக வலைதளத் தில் பரவவிட்டனர்.

மூன்றாவது பிரச்சினை, முதல்அமைச்சரின் அரசியல் பிரிவு ஆலோசகராக ரிக்கி ரதன் பண்டிட் வெற்றி வேல் நியமனம் செய்யப் பட்டது. அதாவது ஒரு ஜோதிடர் எப்படி அரசியல் ஆலோசனைகள் வழங்கு வார் என்று கம்யூனிஸ்டு கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து உள்ளன. அதனை திரும்ப பெற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்டு மாநிலச் செயலாளர் வீர பாண்டியன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு மாநிலச் செய லாளர் சண்முகம் ஆகியோர் வலியுறுத்தி உள்ளனர்.

வி.சி.க.வின் வன்னியரசு வெளியிட்டுள்ள பதிவில், ஆஸ்தான ஜோதிடர்கள் என்பவர்கள் மன்னர்களின் அரசவையில் ஆலோசனை கூறும் ராஜகுருக்களாக வலம் வந்தவர்கள். ஆனால் இன்று மன்னர்களும் இல்லை, மன் னராட்சியும் இல்லை. அவர் களை ஆட்டிப்படைத்த வேத குப்பைகளும் இல்லை. அம்பேத்கர் வகுத்தளித்த அரசியலமைப்பு சட்டத்தின் துணையோடு மக்களாட்சி நடைபெறுகிறது.

இன்றைய காலகட்டத் தில் மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்ட அரசை தலைமை யேற்று நடத்தும் முதல் அமைச்சருக்கு ஆலோசனை கூறும் அரசுப்பதவியில், ‘ஹார்ட் அட்டாக் வந்தால் பதற்றப்படாதீர்கள், மந்தி ரம் சொல்லுங்கள்’ ‘தலை விதி இருந்தால் தான் ஒருவ ருக்கு அரசு வேலை கிடைக்கும்’ என்று அறி வுரை சொல்லும் நபரை நியமிப்பது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. மூடநம்பிக்கைகளுக்கு எதி ராக இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் நடைமுறை யில் உள்ள மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டத்தை விரி வாக ஆராய்ந்து தமிழ்நாட் டிலும் அத்தகைய சட் டத்தை கொண்டு வருவது தான் மதச் சார்பற்ற அரசின் பணியாக இருக்கவேண் டும். இந்த நியமனத்தை தமிழ்நாடு அரசு உடனே திரும்ப பெற வேண்டும் என்று கூறியுள்ளார்.